DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**O.S.No. 220 of 2023**

} Prosecution
Deposition of D.W.3 } Defence
}

Name of the Witness : திரு.தம்பிதுரை

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 07.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சொல்ல அழைப்பாணை சார்பதிவாளருக்கு அனுப்பப்பட்டது. சார்பதிவாளர் சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் வழங்கியுள்ளார். அந்த அனுமதி கடிதம் **Ex.X1** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. சம்மனில் குறிப்பிடப்பட்டுள்ள 16.12.2004 தேதியிட்ட உயிலை ஆஜர் படுத்துகிறேன். அந்த உயில் **Ex.X2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த உயில் சட்டபடியாக தான் சார்பதிவாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த உயிலை காவேரியப்பன் மகன் சித்தன் ராஜேந்திரன் மகன் முனிராஜ் பெயரில் எழுதியுள்ளார். அதில் சாட்சிகளாக கதிர்வேல் என்பவர் சாட்சியாக கையெழுத்தும் ராஜேந்திரன் கைரேகையும் வைத்துள்ளார். உயில் எழுதிய நபர் சார்பதிவாளர் முன்பு ஆஜரானால் தான் பதிவு செய்யப்படும், உயில் பதிவு எண் 39/2004. மேற்படி உயில் 10.04.2007 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது. ரத்து பத்திரம் **Ex.X3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

உயில் ரத்தாகி விட்டதால் அதை நடைமுறை படுத்த முடியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 தானபத்திரம் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த தானபத்திரம் ரத்தாகி விட்டதாக குறிப்புள்ளது என்றால் சரிதான். அதனால் தானபத்திரத்தை நடைமுறைபடுத்த முடியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 7.7.2005 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக பி.சா.ஆ.2 ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரத்து பத்திரம் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

*2) பி.சா.ஆ.4 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானபத்திரம் எங்கள் அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் ரத்து செய்யப்பட்டு விட்டதற்கான குறிப்புள்ளது என்றால் சரிதான். அந்த ரத்து பத்திரம்* **வா.சா.ஆ.16** *ஆக குறியீடு செய்யப்படுகிறது.*

***<u>மறு விசாரணை</u>***

*3) பி.சா.ஆ.3யை சாட்சி படித்து பார்த்து விட்டு சித்தன் அவருடைய மகன் ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்துள்ளார்.*

*பி.சா.ஆ.4யை சாட்சி படித்து பார்த்து விட்டு சித்தன் அவருடைய மகன் ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்துள்ளார். வா.சா.ஆ.15 மூலமாக வாதி பெரியம்மாவிற்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 22.03.2010 தேதியிட்ட ரத்து பத்திரம் மூலமாக பி.சா.ஆ.4 ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.*

*4) பி.சா.ஆ.3 13.05.2004 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யபடவில்லை என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தவரே அதை தானாக ரத்து செய்ய முடியாது என்றால் சரிதான். 2012க்கு பின்னர் எழுதி கொடுத்தவரே ரத்து செய்ய முடியாது என்று சர்குலர் வந்தது.*